## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - 2014

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்களின் கூற்று மற்றும் காசோட்டக் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவுளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(1) ஆம் பிரிவின்படி யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்கள் (எஸ்எல்பிஎஸ்ஏஎஸ்)**

**எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் 7- ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்:** முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டதும் மீளாய்வாண்டில் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டிருந்த ரூபா 6,836,600 மொத்த கிரயத்தில் கடியாரங்கள் மற்றும் பதக்கங்கள் போன்ற நிலையான சொத்துக்கள் நியமத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

கணக்காய்வில் பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது பெறப்பட்ட ரூபா 250,114 பெறுமதியான களஞ்சிய விடயங்கள் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கிளிநொச்சியில் பொறியியல் பீடத்தின் காணி தயார்ப்படுத்தல் 2013 ஆம் ஆண்டின் போது நில அளவையாளர் திணைக்களத்தால் ரூபா 3,332,634 கிரயத்தில் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும், நில அளவையாளர் நாயகத் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்ட முற்பணங்கள் தீர்க்கப்படாமையால் செலவினம் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 4,884,597 பெறுமதிக்கு ஐந்து மின்சார வழங்கல் வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டு 2013 ஆண்டின் போது பல்கலைக்கழகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இலங்கை மின்சார சபையால் 2015 யூலை 31 வரையும் வேலை பூர்த்தியாக்கல் சான்றிதழ் சமர்ப்பிக்காமையால் இது மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 520,957,509 பெறுமதிக்கு கட்டிட நிர்மாண வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 402,939,785 ஆக காட்டப்பட்டிருந்தது. இதன் விளைவால், ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 118,017,724 ஆல் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது.

(உ) பல ஆண்டுகளிற்கு முன்னர் முன்னால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைக்கு செலுத்தப்பட்ட ரூபா 9,816,163 ஆன முற்பணம் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. மேலும், உரிய மாகாண சபைக்கு செய்யப்பட்ட முற்பணத்தின் திகதி கோரப்பட்ட போது கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 தொங்கல் கணக்கு

2012 இலிருந்து தொங்கல் கணக்கிலுள்ள ரூபா 288,204 ஆன மீதி தெளிவாக்கப்படாமல் காட்டப்பட்டிருந்தது. இந்த விடயம் 2012 இலிருந்து முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பில் உரிய அதிகாரிகளால் அர்த்தமுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த விடயம் 2014 ஆகஸ்ட் 22 இல் நடைபெற்ற சீஓபிஈ கூட்டத்திலும் விவாதிக்கப்பட்டிருந்ததுடன் துணை வேந்தர் சபையின் அங்கீகாரத்துடன் விடயத்தை சரிசெய்வதற்கு உடன்பட்டிருந்தார்.

### 2.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆறு ஆண்டுகளிற்கு மேலாக அறவிட வேண்டியிருந்த ரூபா 454,810 தொகையான நிலுவையாகவிருக்கின்ற அறவிடவேண்டிய மீதியை அறவிடுவதற்கோ அல்லது பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் ஐயக் கடனுக்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிலுவையாகவிருக்கின்ற மீதிகளில் உள்ளடக்கப்பட்ட ரூபா 2,807,386 தொகையான செலுத்த வேண்டியவைகள் ஏழு ஆண்டுகளிற்கு மேலாக தீர்க்கப்படாமல் இருந்தது.

(இ) 1986 இலிருந்து 2004 வரையான காலத்தின் போது மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு செலுத்தப்பட்ட ரூபா 842,824 கூட்டு மொத்தத் தொகையான ஒன்பது முற்பணங்கள் இந்த அறிக்கை திகதி வரை தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ரூபா 97,655 தொகையான செலுத்தப்படாத பரீட்சிப்பு கோரிக்கைகள் தொடர்புபட்ட உரிய தரப்பினருக்கு அந்த கோரிக்கைகளை செலுத்தாமல் 10 ஆண்டுகளிற்கு மேலாக வைப்புக் கணக்ககளில் விடப்பட்டிருந்தது.

(உ) ரூபா 1,857,491 ஆன உத்தியோகத்தர் கடன் மீதி நிலுவைகளை அறவிடுவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்காமல் 7 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக இருக்கின்றன.

(ஊ) பிரயோக விஞ்ஞான பீடத்திற்காக அரை சொகுசு விரிவுரை மண்டபம் - 01 நிர்மாணிப்பது தொடர்பில் செலுத்தப்பட்ட ரூபா 1,676,432 ஆன முற்பணம் மாகாண கட்டிடத் திணைக்களத்தால் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) மருந்து பொருட்கள் மற்றும் காகிதாதிகள் கொள்வனவு செய்வதற்காக 2006 இல் உத்தியோகத்தரொருவருக்கு செலுத்தப்பட்ட ரூபா 1,121,194 ஆன தீர்க்கப்படாத முற்பணங்களில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) கலை பீட கட்டிட தொகுதி, இராமநாதன் இயல் இசைக் கலைப் பீடம், விவசாய இயற்கை விஞ்ஞான பிரிவு மற்றும் மருத்துவ பீட மண்டபம், கலைப்பீடத்தின் கட்டமைப்பு (கைலாசபதி மண்டபம்) வர்த்தக கற்கைகள் பீடம் மற்றும் வவுனியா வளாகத்தின் கட்டம் III என்பவற்றின் பல்வேறு நிர்மாண வேலைகளிற்காக 2001 – 2013 வரையான காலத்தின் போது செய்யப்பட்ட ரூபா 37,171,324 கூட்டு மொத்த

தொகையான முற்பணங்கள் 2015 யூலை 31 வரையும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஐ) புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் வழங்குவதற்காக 2010 முதல் 2014 வரையான காலத்தின் போது ரூபா 13,639,960 கூட்டு மொத்தத் தொகையான பல்வேறு வழங்குநர்களிற்காக செலுத்தப்பட்ட முற்பணங்கள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) கிளிநொச்சி பாதுகாப்பு தலைமை அலுவலகம், உயர் கற்கைகளிற்கான தேசிய நிலையம், ஆராய்ச்சி மானியம், முதுமானி கல்வி, பராமரிப்பு, நானாவித செலவினம், வழங்கல் முற்பணம், வடக்கு கிழக்கு மாகாணசபை, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், தேசிய விவசாய ஆராய்ச்சித் திட்ட க/கு, ஆராய்ச்சி மனியம் (தேசிய ஆய்வு பொருள் ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டம்) கண்காட்சி, மகளீர் மேம்பாட்டு செயற்திட்டம் மற்றும் காகிதாதிகள் போன்று பல்வேறு நிறுவனங்ளிற்கு பல்வேறு நோக்கங்களிற்காக செய்யப்பட்ட ரூபா 22,411,763 கூட்டு மொத்தத் தொகையான முற்பணங்கள் 2015 யூலை 31 வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும், இந்த தொகையில் ரூபா 104,050 ஆன தொகை 10 ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

ரூபா 69,522,188.59 பெறுமதிக்கு நன்கொடைகள், வாகன விபத்துக்கள் காரணமாக விளைந்த நட்டம், சேதங்கள், பீட சபைகளின் தீர்மானங்கள், ஆராய்ச்சிப் படி கொடுப்பனவுகள், கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல், விடுதி வாடகை வருமானம் மற்றும் தீர்க்கப்படாத படிகள் போன்றவற்றின் நம்பகத் தன்மை மற்றும் உண்மைத்தன்மை பின்வரும் சான்றுகளை சமர்ப்பிக்காமையால் கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

- வெளிநாடுகள்/ தூதரகங்களிடமிருந்து பெறப்பட்ட நன்கொடைகள் மீதான விரிவான அறிக்கைகள்
- பல்கலைக்கழக செனற் சபையின் கூட்டக் குறிப்புகள்
- விபத்துக்கள் /நட்டங்களின் அறிக்கைகள்
- கல்வி நிகழ்ச்சித்திட்டங்களின் விபரங்கள்
- கல்விசார் உத்தியோகத்தர்களால் பூர்த்தியாக்கப்பட்ட ஆராய்ச்சி விபரங்கள்
- விடுதி வாடகை பதிவேடு
- தீர்க்கப்படாத முற்பணங்களின் பதிவேடு

**2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான தாபனவிதிக் கோவை | |
| (i) அத்தியாயம் XXII இன் 11.1 ஆம் பிரிவு | ரூபா 1,572,450 மோசடி கொடுப்பனவிற்காக பொறுப்புடைய நபர்களிற்கு ஒழுக்காற்று விசாரணை நடத்துதல் மற்றும் விசாரணை அறிக்கை வழங்கல் மீதான நடவடிக்கை ஒரு ஆண்டும் எட்டு மாதங்களும் கடந்த பின்னரும் கூட தொடங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் XXVI இன் 2, 3, 4 ஆம் பிரிவுகள் | வெளியீடுகள் மற்றும் நூலகப் புத்தகங்களின் இருப்பு வருடாந்தம் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (iii) அத்தியாயம் XXVII இன் 3.1 ஆம் பிரிவு | பல்கலைக்கழகம் மற்றும் வவுனியா வளாகத்தின் கல்விசார் உத்தியோகத்தர்களின் உள்வருகை மற்றும் வெளிச்செல்லல் மீதான விதிகள் மற்றும் பிரமாணங்களை பின்பற்றுவதற்கு சீஓபிஈ ஆல் நெறிப்படுத்தல்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் வருகைப் பதிவேட்டில் உள்வருகை மற்றும் வெளிச் செல்லல் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்க நிதிப் பிரமாணங்கள் | |
| (i) நிதிப்பிரமாணம் 135(4) | கணக்கீட்டு உத்தியோகத்தரால் செயற்பாடுகளின் கையளிப்பின் வருடாந்தம் நாளதுவரையாக்கப்பட்ட பட்டோலைகள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 136(6) | அதிகாரமளிக்கப்பட்ட நபருடைய பதிவேடுகள் சான்றுபடுத்தும் உத்தியோகத்தரால் குறைந்தது மாதத்திற்கு ஒரு தடவை ஒப்பீடு செய்யப்பட்டு இணக்கம் செய்திருக்கவில்லை. |
| (iii) நிதிப்பிரமாணம் 140(3) | காசாளர் அவருடைய விசேட அறிவிற்கு ஏதாவது விடயங்களை ஆய்வு செய்வதற்கு தவறியிருந்ததுடன் ரூபா 1,572,450 கூட்டு மொத்தத் தொகையான ஆறு மோசடியான கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் தொடர்பில் கணக்கிற்கு எடுப்பதற்கு முன்னர் முறையாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) நிதிப்பிரமாணம் 272(3) | செலுத்தப்பட்ட கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் அவைகள் சம்பந்தப்பட்ட மாதத்தின் முடிவிலிருந்து குறைந்தது ஆறு கிழமைகளிற்குள் மாதாந்தம் கணக்காய்விற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (v) நிதிப்பிரமாணம் 1645 | வாகனங்களிற்கு பொறுப்புடைய உத்தியோகத்தர் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதற்கான அடுத்துவரும் மாதம் 15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் உரிய நிறுவனத்தின் தலைவர் ஊடாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஒவ்வொரு வாகனத்தினதும் ஓடிய பிரயாண மாதந்தப் பொழிப்பு மற்றும் ஒவ்வொரு வாகனத்தினதும் நாளாந்த ஓட்ட அட்டவணை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2015 மே மாதத்திற்காக மாத்திரம் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. |

**(இ) சுற்றறிக்கை ஏற்பாடுகள்**

| | |
|---|---|
| (i) 1980 பெப்ரவரி 25 ஆந் திகதிய 63 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை | பாதீடிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினத்திற்கும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்திற்குமிடையில் உள்ள வித்தியாசங்கள் காணப்படுவதற்கான அறிக்கையும் முரண்களிற்கான காரணங்களும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கை | வாகனங்களின் எரிபொருள் நுகர்வு ஆறு மாதங்களிற்கு ஒரு தடவை பரீட்சிக்கப்பட்டிருக்க வேண்டும். இருந்த போதிலும் பல்கலைக்கழகத்திற்கு சொந்தமாக 17 வாகனங்கள் தொடர்பில் இந்நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1. நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தின் தொழிற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 119,128,668 ஆன நேரொத்த பற்றாக்குறையுடன் ஒப்பிடப்படும் போது ரூபா 124,793,315 ஆன பற்றாக்குறையில் விளைவித்திருந்தமையால், நிதிசார் விளைவுகளில் ரூபா 5,664,647 ஆன மேலுமொரு வீழ்ச்சியைக் காட்டுகின்றது. ரூபா 4,498,658 ஆல் பராமரிப்பு செலவினங்கள் அதிகரித்தமையே இந்த வீழ்ச்சிக்கு பிரதான கரணமாக பங்களித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1. செயலாற்றல்

மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தின் கல்விசார் செயலாற்றல் பின்வருமாறு இருந்தது.

**(அ) பரீட்சைப் பெறுபேறுகள்**

1995 யூலை 14 ஆந் திகதிய 636 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் பிரகாரம், பரீட்சைகளின் பின்னர் மூன்று மாதங்களிற்குள் பெறுபேறுகள் விடுவிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு பீடங்களின் கீழ் பல்வேறு பாடநெறிகளிற்காக நடாத்தப்பட்ட பரீட்சைகள் நடைபெறுவதற்கான திகதி மற்றும் பரீட்சை பெறுபேறுகள்

விடுவிப்பதற்கான திகதி என்பன நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை. 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது விவசாய, கலைகள், முகாமைத்துவ மற்றும் கற்கைகள், விஞ்ஞான பீடங்கள் மற்றும் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி பரீட்சைப் பிரிவு என்பவற்றால் நடாத்தப்பட்ட பரீட்சை திகதியிலிருந்து 04 மாதங்கள் முதல் 15 மாதங்கள் வரையான வீச்சில் பரீட்சை பெறுபேறுகள் விடுவிப்பதில் கருத்திற்கொள்ள வேண்டிய கால தாமதங்கள் உள்ளமை மேலும் அவதானிக்கப்பட்டது. ஆதலால், மாணவர்கள் உரிய காலத்தில் அவர்களுடைய வேலை வாய்பிற்கான சந்தர்ப்பங்களை பெறுவதற்கு பின்தங்கியிருந்தனர். இந்த விடயம் என்னுடைய முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையிலும் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும், மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய பெபேறுகளை விடுவிப்பதற்கு உரிய அதிகாரிகளால் அர்த்தமுள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) ஒரு மாணவனுக்கான கிரயம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது பல்கலைக்கழகத்தில் பதிவுசெய்யப்பட்ட மொத்த மாணவர்கள், ஏற்பட்ட மொத்த செலவினங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2014 | | | 2013 | | |
|---|---|---|---|---|---|---|
| **பீடங்கள்** | **மொத்த கிரயம்** | **மொத்த மாணவர் எண்ணிக்கை** | **ஒரு மாணவனுக்கான கிரயம்** | **மொத்த கிரயம்** | **மொத்த மாணவர் எண்ணிக்கை** | **ஒரு மாணவனுக்கான கிரயம்** |
| | **ரூபா** | | **ரூபா** | **ரூபா** | | **ரூபா** |
| கலைகள் | 308,724,672 | 3,137 | 98,414 | 266,922,273 | 2,917 | 91,506 |
| விவசாயம் | 85,478,313 | 295 | 289,757 | 69,307,096 | 198 | 350,036 |
| பொறியியல் | 24,980,617 | 100 | 249,806 | 3,897,490 | 208 | 18,738 |
| மருத்துவம் | 173,276,479 | 830 | 208,767 | 141,471,824 | 498 | 284,080 |
| முகாதைத்துவ கற்கைகள் மற்றும் வர்த்தகம் | 74,631,840 | 1,484 | 50,291 | 59,832,990 | 894 | 66,927 |
| விஞ்ஞானம் | 214,633,877 | 1,213 | 176,945 | 185,859,387 | 662 | 280,754 |
| வவுனியா வளாக பிரயோக விஞ்ஞானம் | 61,068,982 | 678 | 90,072 | 50,672,015 | 214 | 236,785 |
| வவுனியா வளாக முகாதைத்துவ கற்கைகள் | 45,845,882 | 571 | 80,290 | 37,184,657 | 132 | 281,702 |
| மொத்தம் | 988,640,662 | 8,308 | | 815,147,732 | 5,723 | |

மீளாய்வாண்டின் போது விவசாய பீடத்தில் ரூபா 289,757 தொகையான ஒரு மாணவனுக்கான உயர்ந்த கிரயம் பதிவு செய்யப்பட்டிருந்த அதேநேரம் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வர்த்தக பீடத்தில் ரூபா 50,291 தொகையான ஒரு மாணவனுக்கான குறைந்த கிரயம் பதிவு செய்யப்பட்டிருந்தது.

**(இ) மஹாபொல**

மீளாய்வாண்டின் போது மாணவர்களிற்கு ''மஹாபொல'' ஆக ரூபா 38,114,100 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மாணவர்களிற்கு ரூபா 1,155,150 ஆன தொகை செலுத்தப்படாதிருந்ததுடன் இந்த பணம் மாணவர்களுடன் உரிய காலத்தில் தகவல் தொடர்பு இன்மையால் மஹாபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நிதியத்திற்கு திருப்பியனுப்பப்பட்டிருந்தது.

### 4.2. செயற்பாட்டு திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இருக்கின்ற நேரடி தொலைபேசி இணைப்பின் பயன்பாட்டினை குறைப்பதன் மூலம் அலுவலக தொலைபேசிக் கட்டணங்களை குறைக்கும் நோக்கில் 2011 சனவரியில் பல்கலைக்கழகத்தில் உள்ளக தொலைபேசி வசதிகள் பொருத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டிற்கான தொலைத்தொடர்புக் கட்டணங்கள் உள்ளக இணைப்புக்கள் ஊடாக வெளிச்செல்லும் தொலைபேசி அழைப்புக்கள் மற்றும் வெளிச் செல்லல் தொலைபேசி அழைப்புக்கள் மீதான கட்டுப்பாடின்மை என்பன காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 5,683,904 அல்லது 29 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ஆ) பல்கலைக்கழகமானது யாழ்ப்பாணத்தில் விருந்தினர் விடுதியொன்றினை வைத்திருந்த போதிலும் பல்கலைக்கழகத்திற்கு வருகைதருகின்ற உத்தியோகத்தர்கள் 2009 ஏப்ரல் மாதத்திலிருந்து வாடகை செலுத்தாமல் விருந்தினர் விடுதியில் பல்கலைக்கழக பதிவாளர் வசித்திருக்கின்றமையால் தனியார் விடுதிகளில் தங்குமிட வசதிகள் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பல்கலைக்கழகத்திற்கு வருகைதருகின்ற உத்தியோகத்தர்களிற்கு தங்குமிட வசதிகள் வழங்கவதற்கு பல்கலைக்கழகத்தால் மீளாய்வாண்டின் போது ரூபா 735,809 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது.

### 4.3. முகாமைத்துவ திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) புலமைப்பரிசில்களில் சென்றிருந்த என்பத்தியாறு விரிவுரையாளர்கள் புலமைப்பரிசில்கள் பூர்த்தியான பின்னர் கடமைகளை பொறுப்பேற்கப்பட்டிருக்காம் அல்லது பல்கலைக்கழகத்திலிருந்து விலகிச் சென்றிருந்தனர். எவ்வாறாயினும், பல்கலைக்கழகமானது உடன்படிக்கைகளை மீறிய அந்த விரிவுரையாளர்களிடமிருந்து 2014 திசெம்பர் 31 வரையும் ரூபா 73,740,389 கூட்டு மொத்தத் தொகைகள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் வவுனியா வளாகத்தில் பிணை உடன்படிக்கைகளை மீறியதற்காக நான்கு உத்தியோகத்தர்களிடமிருந்து பெறவேண்டிய ரூபா 9,786,272 தொகையான பிணை உடன்படிக்கைகளும் 2015 நவம்பர் 24 வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 1,572,450 கூட்டு மொத்த தொகையான இருபது கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் நூலக புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகளை பெற்றுக்கொள்ளாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததாக மோசடி செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பில்

பல்கலைக்கழகமானது பொறுப்புடைய தரப்பினர்களிடமிருந்து கொடுப்பனவை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வித்தியாசமான ஆண்டுகளில் பல்வேறு நோக்கங்களிற்காக கட்டிட திணைக்களத்திற்கு (மத்திய) ரூபா 1,545,255 கூட்டு மொத்த தொகையான முற்பணங்கள் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கட்டிட திணைக்களம் வேலைகளை தொடங்கப்பட்டிருக்காததுடன் பல்கலைக்கழகத்திற்கு மீளளிப்பதற்கு பதிலான அரசாங்க வருமான கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பல்கலைக்கழகம், கட்டிட திணைக்களத்திற்கு செலுத்தப்பட்ட தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) தனியார் கம்பனியொன்றிடமிருந்து ரூபா 3,150,000 கிரயத்தில் வெளியிலிருந்து பெறப்பட்டவை பல்கலைக்கழகத்தின் நிலையான சொத்துக் பதிவேடு தயாரித்தல் சேவைக்கு 2013 நவம்பர் 18 இல் ஒப்பந்த உடன்படிக்கை கைசாத்திடப்பட்டிருந்தது. ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம், வேலைகள் 2014 மே 31 இற்கு முன்னர் பூர்த்தியாக்கப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், வேலைகள் 1 ஆண்டு 2 மாதங்கள் கடந்த பின்னர் 2015 யூலை 31 வரையும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தால் உடற்பயிற்சி உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 799,228 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. 2015 ஆகஸ்ட் 18 இல் மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வில் மேற்குறிப்பட்ட பொருட்கள் முறைப்படி பேணப்பட்டிருக்காததுடன் இயந்திரங்களைப் பயன்படுத்துகின்ற மாணவர் பதிவேடு கிடைத்திருக்கவில்லை என வெளிப்பட்டது.

(ஊ) ரூபா 398,000 கிரயத்தில் எண்பது பொக்ஸ்ரைல் மரங்கள் கொள்வனவு செய்யப்பட்டு பம்பைமடு முகாமைத்துவ கற்கைகள் பீடத்தின் நுழைவாயிலில் நடப்பட்டிருந்தது. 2015 ஆகஸ்ட் 07 இல் மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வில் மரங்களும் முறையான பாரமரிப்பு இன்மையால் எட்டு மரங்கள் முழுமையாக சேதமடைந்திருந்தது என வெளிப்பட்டது.

(எ) விவசாய பீடத்தின் நிலத் தயார்படுத்தலிற்காக இரண்டு சந்தர்ப்பங்களில் கிளிநொச்சி பாதுகாப்புபடை தலைமை அலுவலகத்திற்கு மீளாய்வாண்டின் போது முற்பணமாக ரூபா 4,266,737 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிலத் தயார்படுத்தல் வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டிருந்தனவா என நிரூபிப்பதற்கு சான்றுகள் எதுவும் கிடைத்திருக்கவில்லை. இதுதொடர்பில், செலுத்திய முற்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) வேறுபட்ட செயற்திட்டங்களின் அமுலாக்கலிற்கு பல்வேறு மூலங்களிலிருந்து பெறப்பட்ட ரூபா 8,110,136 ஆன தொகை குறித்த நோக்கங்களிற்காக முழுமையாக பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் 10 ஆண்டுகளிற்கு மேலாக செலவழிக்கப்படாத மீதிகளாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) முற்பணங்கள் மீதான மேற்பார்வை மற்றும் கட்டுப்பாடுகளிற்காக முறையான பொறிமுறையொன்று பல்கலைக்கழகத்தால் அறிமுகப்பட்டிருக்காததுடன் கொடுப்பனவுகளின் உண்மையான தேவைகளை மதிப்பீடு செய்யாமல் பல்வேறு உத்தியோகத்தர்களிற்கு முற்பணங்கள் செலுத்தப்பட்டது. மேலும், உத்தியோகத்தர்களால் முற்பணங்களின் தீர்ப்பனவில் கருத்திற்கொள்ளக்கூடிய கால தாமதங்கள் அவதானிக்கப்பட்டன. பல்வேறு நோக்கங்களிற்காக பெறப்பட்ட முன்னைய முற்பணங்களின் தீர்பனவைக் கருத்திற்கொள்ளாமல் முற்பணங்கள் லெுத்தப்பட்டன.

**4.4. நூலக நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நூலகங்களிலிருந்து புத்தகங்களை பெற்றிருந்த முப்பத்தியொரு கல்விசார், நிர்வாக மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்களால் குறிப்பிட்ட காலத்திற்குள் எழுபத்து ஒன்பது புத்தகங்கள் திரும்ப ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில், 2010 முதல் 2015 வரையான வீச்செல்லை கொண்ட காலங்களிற்காக நிலுவையாகவிருக்கின்ற புத்தகங்களை திரும்ப பெறுவதற்கோ அல்லது தாமதத்திற்கான தண்டப்பணங்கள் விதிப்பதற்கோ முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல்கலைக்கழகமானது 2006 இலிருந்து வழங்குநர்களிடமிருந்து பல்கலைக்கழகத்தால் பெறப்பட்டிருக்காத ரூபா 2,337,908 பெறுமதியான 724 புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் நாளேடுகள் என்பவற்றில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.5. இனங்காணப்பட்ட நட்டங்கள்**

பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ரூபா 1,572,450 கூட்டு மொத்த தொகையான இருபது கொடுப்பனவு உறுதிச்சீட்டுகள் ஊடாக 2012 முதல் 2013 வரையான காலத்தின் போது கொள்வனவு செய்யப்பட்ட புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் மேற்குறிப்பிட்ட விடயங்களை பெற்றுக்கொள்ளாமல் கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்ததாக மோசடி செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பில், பல்கலைக்கழகமானது பொறுப்புடைய நபர்களிடமிருந்து கொடுப்பனவுகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.மேலும், இந்த கொடுப்பனவுகள் நாட்குறிப்பு பதிவுகளால் புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் தொங்கல் கணக்கு நட்டங்களிற்கு மாற்றப்பட்டிருந்ததுடன் உள்ளக மற்றும் நட்டங்களை அறவிடும் நோக்கில் வெளிவாரி விசாரணை நடைமுறைகள் செயற்பாட்டில் உள்ளன.

(ஆ) 2013 ஆம் ஆண்டின் போது சமுதாய தலைவரின் வதிவிடம் மற்றும் மருத்துவ பீடம் என்பவற்றில் ரூபா 110,000 கிரயத்திலான மடி கணனி இழக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் ஆரம்ப விசாரணைகள் நடத்துவதற்கும் தொடர்புபட்ட உத்தியோகத்தரிடமிருந்து இழப்பினை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தாதியியல் பிரிவு ஒருங்கிணைப்பாளரால் ரூபா 104,220 பெறுமதியான இன்னொரு மடிகணனி இழக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில், சபை தீர்மானத்தின் அடிப்படையில் பல்கலைக்கழகத்தால் நட்டங்களின் பொறுப்புக்கள் நிர்ணயிக்கப்பட்டதுடன் தொடர்புபட்ட உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 115,800 முழுமையான மீளளிப்பு கிரயத்தை அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், இரண்டு ஆண்டுகள் கடந்த பின்னரும் 2015 செப்தெம்பர் 02 வரை உத்தியோகத்தரிடமிருந்து நட்டம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிதிப் பிரமாணம் 756 இன் பிரகாரம், 2014 ஆம் ஆண்டிற்கான கணிப்பீட்டு சபை அறிக்கைகள் மூலம் 821 குறைவுகள் மற்றும் இழப்புகள் தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.6 மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைகக்கழகமானது 2014 திசெம்பர் 31 வரையும் 395 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஏழு பீடங்களில் பேராசிரியர்கள், இணைந்த பேராசிரியர்கள் போன்ற பிரதான கல்விசார் பதவிகளில் 136 வெற்றிடங்கள் உள்ளன. எவ்வாறாயினும், பல்கலைக்கழகமானது அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களிற்கான தாபனவிதிகோவையின் III ஆம் அத்தியாயத்தின் 21 ஆம் பிரிவின் பிரகாரம், பல ஆண்டுகளாக பல்கலைக்கழகத்தால் நியமிக்கப்பட்ட 1,241 உத்தியோகத்தர்களின் கல்வித் தகைமைகளின் சான்றுபடுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பொறியியல் மற்றும் விவசாய பீடங்கள் மற்றும் வேறு திணைக்களங்கள் கல்விசார் நடவடிக்கைகள் கடந்த இரண்டு ஆண்டுகளின் போது விரிவாக்கப்பட்டிருந்த போதிலும் பதவியணியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) காசாளர், பிரதி காசாளர், சிரேஷ்ட உதவிக் காசாளர் மற்றும் உதவிக் காசாளர் மற்றும் பிரதி உள்ளக கணக்காய்வாளர் போன்ற பதவி நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், முப்பது பயிற்சி முகாமைத்துவ உதவியாளர்கள் பல்கலைக்கழகத்தின் கல்விசாரா உத்தியோகத்தர்களின் நிரந்தர பதவிகளின் கடமைகளை மேவுகின்றனர்.

**4.7 ஒப்பந்த நிர்வாகம்**

ரூபா 602,262 பெறுமதிக்கு கிளிநொச்சி அறிவியல் நகரில் உத்தியோகபூர்வ விடுதிகளின் நிர்மாணம் தொடர்பில் பதினைந்து விடயங்கள் ஒப்பந்தகாரரால் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. பின்னர், அந்த வேலைகள் முறையான கொள்வனவு நடைமுறை 2014 ஆம் ஆண்டின் போது இன்னொரு ஒப்பந்தகாரரால் நிவேற்றப்பட்டிருந்தது.

**4.8 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) கல்விசார் உத்தியோகத்தர்களிற்கான வருகைப் பதிவேடு நீண்ட காலமாக பேணப்பட்டிருக்கவில்லை. ஆகவே, மீளாய்வாண்டின் போது உத்தியோகத்தர்களால் எடுக்கப்பட்ட விடுமுறை மற்றும் செலுத்தப்பட்ட சம்பளங்களின் உண்மைத்தன்மையை கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியவில்லை. இது தொடர்பில், 2014 ஆகஸ்ட் 22 இல் நடைபெற்ற பொது முயற்சிகள் குழுவில் பல்கலைக்கழகத்திற்கு இணைக்கப்பட்ட சகல உத்தியோகத்தர்களும் விதிகள் மற்றும் பிரமாணங்களை பின்பற்றபட வேண்டியதுடன் வருகை பதிவேட்டில் சரியான நேரத்தில் சிவப்பு கோடு இடுவதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தர் நெறிப்படுத்தப்பட்டதுடன் இதன்படி கடமையாற்ற வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், இந்த நெறிப்படுத்தல் 2015 செப்தெம்பர் 02 ஆம் கணக்காய்வு திகதிவரை பல்கலைக்கழகத்தால் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட 2010 பெப்ரவரி 15 ஆந் திகதிய 02/2010 ஆம் இலக்க தாபனங்கள் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 779,520 பெறுமதியான

பன்னிரண்டு கையடையாள இயந்திரம் பல்கலைக்கழகத்தின் சகல பிரிவிலும் வினைத்திறனாக பொருத்தப்பட்டிருக்கவில்லை.

**4.9 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

வற் வரி பதிவு இலக்கத்தின் தகுதியை பரீட்சிக்காமல் நிர்மாண வேலைகளிற்காக பல்கலைக்கழகத்தால் ரூபா 1,255,459 கூட்டு மொத்த தொகையான பெறுமதி சேர் வரி செலுத்தப்பட்டிருந்ததுடன் கொடுப்பனவு செய்யும் நேரத்தில் வற் பட்டியல்கள் செய்யப்பட்டன. பின்னர், ஒப்பந்தகாரரால் செய்யப்பட்ட வற் இலக்கம் தவறானது எனக் கண்டுபிடிக்கப்பட்டது.

**4.10 கொள்வனவு நடைமுறையை பின்பற்றாமை**

மீளாய்வாண்டின் போது அலுவலக தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள், புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள், கடிகாரங்கள், தொலைபேசி பரிவர்த்தனைகள் மற்றும் காகிதாதிகள் என்பவற்றின் கொள்வனவிற்காக ரூபா 946,750,914 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கொள்வனவு கைநூலின் 4.2.1 ஆம் பிரிவின் பிரகாரம், விரிவான கொள்வனவு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கொள்வனவு வழிகாட்டல்களின் 4.2.1 (ஆ) ஆம் பிரிவின் பிரகாரம், குறைந்தது மூன்று ஆண்டு காலத்திற்காக கற்பனையான கொள்வனவு நடவடிக்கைகள் பிரதான கொள்வனவு திட்டத்தில் பட்டியலிடப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், பல்கலைக்கழகமானது மீளாய்வாண்டிற்கான கொள்வனவு நடவடிக்கையை மாத்திரம் பட்டியலிட்டிருந்தது.

(இ) பிரதான கொள்வனவு திட்டத்தின் இல 07 முதல் இல. 13 வரை குறிப்பிடப்பட்ட விடயங்களிற்காக இலக்கிடப்பட்ட பூர்த்தியாக்கல் திகதி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பிரதான கொள்வனவு திட்டம் உயர் கல்வி அமைச்சு செயலாளரால் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கொள்வனவு வழிகாட்டலின் 4.2.2 ஆம் பிரிவின் பிரகாரம், காலக்கிரமமான கட்டளைகளில் குறிப்பிடப்படுதல் மற்றும் தொடங்குதல் புள்ளியிலிருந்து அதன் பூர்த்தியாக்கல் வரை ஒவ்வொரு தனிப்பட்ட கொள்வனவினதும் படிமுறைகள் என்பவற்றின் மூலம் கொள்வனவு நேரப் பட்டியலொன்று தயாரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், கால அட்டவணை மற்றும் ஒவ்வொரு தனிப்பட்ட கொள்வனவு திட்டத்தின் படிமுறைகள் பல்கலைக்கழகத்தால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.11. சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2006 இலிருந்து பல்கலைக்கழகத்தின் இரண்டு வாகனங்கள் பயன்படுத்தப்படாது இருந்தது. எவ்வாறாயினும், பல்கலைக்கழகம் குறித்த நோக்கத்திற்காக அந்த வாகனங்களை பயன்படுத்துவதற்கு அர்த்தமுள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ரூபா 264,879 கூட்டுமொத்தத் தொகையான மெழுகுதிரிகள், கணனி தாள்கள் மற்றும் தட்டெழுத்து தாள்கள் போன்ற நுகர்வு மற்றும் பராமரிப்பு விடயங்கள் 01 முதல் 15 ஆண்டுகள் வரையான வீச்சிலான காலமாக பயன்படுத்தப்படாது இருந்ததுடன் பல்கலைக்கழகத்தின் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

(iii) ரூபா 12,861,777 பெறுமதியான கணனிகள் மற்றும் உபபாகங்கள் குறித்த நோக்கங்களிற்காக பயன்படுத்தப்படாமல் வவுனியா வளாகத்தில் பயனற்று இருந்தது.

(iv) வவுனியா வளாகம் 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 4,308,000 கிரயத்தில் ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்ட 50 கணனிகள் ஒரு ஆண்டிற்கு மேலாக ஐரீ நிலையத்தில் பயனற்றிருப்பதற்கு அனுமதிக்கப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 12,113,912 கிரயத்தில் 100 கணனிகள் மற்றும் உபபாகங்களை கொள்வனவு செய்திருந்தது.

## 5. கணக்களிதகைமை மற்றும் நல்ல ஆளுகை

### 5.1 ஆண்டறிக்கை சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந்திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவின் பிரகாரம், 2015 யூலை 31 வரையும் 2013 ஆம் ஆண்டிற்கான ஆண்டு அறிக்கைகள் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டிற்கான உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தின்படி, பின்வரும் கொடுக்கல் வாங்கல் பகுதிகள் உள்ளக கணக்காய்வு பிரிவால் முழுமையாக பரீட்சிக்கப்பட்டு/ மேவப்பட்டிருக்கவில்லை.

(அ) மூலதன வேலை செயற்திட்டங்கள் மற்றும் ஒப்பந்த முகாமைத்துவம்
(ஆ) தீர்க்கப்படாத முற்பணங்கள்
(இ) வாகன விபத்துகள்
(ஈ) இழப்புகள்

### 5.3 கொள்வனவு திட்டம்

பல்கலைக்கழகமானது 2006 கொள்வனவு வழிகாட்டலின் 4.2 ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக கொள்வனவு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.4 கணக்காய்வு ஐயவினாக்கள் மீதான தொடர்நடவடிக்கை

2011 முதல் 2014 வரையான ஆண்டுகளின் போது 04 கணக்காய்வு ஐய வினாக்களிற்கு பதிலளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடிடப்பட்டவற்றிற்கும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினங்களிற்கும் இடையில் குறிப்பிடக்கூடிய முரண்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடானது சிறந்த முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் காட்டுகின்றது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் மீது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஆ) நூலக நிர்வாகம்
(இ) களஞ்சிய நிர்வாகம்
(ஈ) ஒப்பந்த நிர்வாகம்
(உ) பெறவேண்டியவைகளும் செலுத்த வேண்டியவைகளும்
(ஊ) கொள்வனவுகள்
(எ) மனிதவளங்கள் முகாமைத்துவம்
(ஏ) பாதீடு
(ஐ) மாதாந்த முன் நிகழ்ச்சித்திட்டங்களும் நாட்குறிப்புகளும்.